கட்டடம் கட்டுவது என்ருல் ஏறத்தாழ 2 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. கட்டிய பிறகு அதை நடைமுறைப்படுத்து வதற்கு அரசாங்கத்திற்கு ஆண்டுக்கு 50 ஆயிரம் ரூபாய், 75 ஆயிரம் ரூபாய் வரையில் செலவாகிறது. நடைமுறைச் செலவுகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் புதிய மருத்துவ மனைகளை உருவாக்குவதற்கு பஞ்சாயத்துக்கள் அவைகளை விரும் பினுல் அதற்கான செலவை ஈடுகட்டுகிற வகையில் தொகை அளிக்க வேண்டும். பத்தாயிரம் ரூபாய் என்பது போதுமான தொகை யல்ல. அது ஒரு அடையாளத் தொகைத்தான். இனி கேட்கப் படப் போவது ஈட்டுத் தொகையாகக் கேட்கப்படும்.

வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு குடியிருப்புகள்

* 280 வினு.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

குடியிருப்பு மனை அற்ற விவசாயத் தொழிலாளர்கட்கு குடி யிருப்பு மனைகள் வழங்கி அவற்றில் வீடு கட்டும் பொறுப்பை சேரணிப் படையிடம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, குடியிருப்பு மனையற்ற விவசாயத் தொழிலாளர்கட்கு குடியிருப்பு மனைகள் வழங்கியிருப்பதில் வீடுகட்டும் பொறுப்பை சேரணிப் படையிடம் ஒப்படைக்கும் உத்தேசம் அரசுக்கு தற்பொழுது இல்லை. ஆனுல் சேரணிப் படையினர் மக்களுக்குப் பயன்படும் வகையில் பள்ளிக்கூடங்கள், குளங்கள், கால்வாய்கள் சீரமைத்தல், சாலைகள் அமைத்தல் போன்ற பணிகளிலே ஈடுபட்டு வருகிருர்கள். தனிப்பட்டவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் பணிகளில் அவர்கள் ஈடுபடுவதில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்தச் சேரணிப் படையின் மூலமாக பலவகையான பணிகள் மிக சிக்கனமாகவும் அதே நேரத்திலே சிறப்பாகவும் அமைகின்ற காரணத்திளுல் கீழத் தஞ்சையைப் பொறுத்த வரையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் குடியிருப்பு மனைகளிலே

1972 மார்ச் 3]

சேரணிப் படையினருக்குத் தேவையான செலவினங்கள் தரக் கூடியவர்களுக்கு வீடுகளை அவர்கள் கட்டித் தரக்கூடிய வகையில் அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, அவ்வித உத்தேசம் எதுவும் இல்லை. கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசிலனை செய்யும்.

திரு. தொ. ப. சீனிவாசன்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே சேரணித் தொண்டர்களால் பல பணிகள் சிறப்பாக நிறைவேற்றப் படுகின்றன, அதற்காக சேரணித் தொண்டர்களுக்கு தமிழக அரசு சிறப்புப் பரிசு அளிக்கும் திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தற்பொழுது அவ்விதத் திட்டம் எதுவும் இல்லை.

Drought in Nanguneri taluk

* 282 *Q.*—THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that continued drought condition prevails in Nanguneri taluk, Tirunelveli district; and

(*b*) if so the steps taken by the Government to prevent the drought?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை. திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில் வறட்சி நிலைமை இப்பொழுது நிலவவில்லை.

(இ) நாங்குநேரி வட்டத்தில் தற்போதுள்ள குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு நடப்பு நிதி ஆண்டில் ரூ. 2,65,720 ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

Forest lands

* 293 *Q.*—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether forest lands have been assigned to the agriculturists as proposed by the Government; and

(*b*) if so, the details of the same?